

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற விழாவில் 70 வயது பூர்த்தியடைந்த மூத்த தம்பதிகளுக்கு இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் சிறப்பு செய்யும் திட்டத்தை தொடங்கி வைத்து, 200 மூத்த தம்பதியினருக்கு சிறப்பு செய்தார். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளாளர், திருப்பெரும்புதூர் ஜீயர் ஸ்ரீ ராமானுஜ எம்பார் சுவாமிகள், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. மணிவாசன், ஆணையர் பி.என்.ஸ்ரீதர், நே. சிற்றரசு எம்.சி., ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி., எஸ்.மதன் மோகன் எம்.சி. மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற விழாவில் 70 வயது பூர்த்தியடைந்த மூத்த தம்பதிகளுக்கு இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் சிறப்பு செய்யும் திட்டத்தை தொடங்கி வைத்து, 200 மூத்த தம்பதியினருக்கு சிறப்பு செய்தார். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளாளர், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் ஸ்ரீ ராமானுஜ எம்பார் சுவாமிகள், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. மணிவாசன், ஆணையர் பி.என்.ஸ்ரீதர், நே. சிற்றரசு எம்.சி., ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் எம்.சி., எஸ்.மதன் மோகன் எம்.சி. மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சென்னை, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோயிலில்,

# 70 வயது பூர்த்தியடைந்த 200 மூத்த தம்பதிகளுக்கு புத்தாடைகள் - மங்கலப் பொருட்கள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ.11–**

**சென்னை, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி பார்த்தசாரதி சுவாமி கோயிலில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில், 70 வயது பூர்த்தியடைந்த ஆன்மிகத்தில் ஈடுபாடுடைய 200 மூத்த தம்பதிகளுக்கு புத்தாடைகள் மற்றும் மங்கலப் பொருட்கள் வழங்கி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று சிறப்பு செய்தார்.**

சென்னை மட்டுமின்றி, தமிழ்நாடு முழுவதும் துறையின் 20 மண்டலங்களில் உள்ள பல்வேறு கோயில்களில் மொத்தம் 2,000 மூத்த தம்பதியினர் இதுபோல் சிறப்பு செய்யப்படுகின்றனர். எல்லோருக்கும் எல்லாம் எனும் நம்திராவிட_மாடல் அரசின் திட்டங்களை மூத்த தம்பதியினர் போற்றி மகிழ்ந்தனர்.

70 வயது பூர்த்தி அடைந்த மூத்த தம்பதிகளுக்கு, இங்கே சிறப்பு செய்கின்ற திட்டத்தை, 2025-2026 ஆம் ஆண்டு சட்டமன்றத்திலே நம்முடைய சேகர்பாபு அண்ணன் அவர்கள் ஒரு அறிவிப்பாக வெளியிட்டு, இன்றைக்கு அதைச் செயல்படுத்திக் காட்டியிருக்கின்றார்.

சென்னை மண்டலங்களில் 200 மூத்த தம்பதிகளுக்கும், இதர மண்டலங்களிலிருந்து 631 மூத்த தம்பதிகள் என மொத்தம் இன்றைக்கு மட்டும் 831 மூத்த தம்பதியருக்கு சிறப்பு செய்யப்பட்டுள்ளது. அந்தத் தம்பதிகளுக்கு ரூபாய் 2,500 மதிப்பிலான புத்தாடைகள், பழங்கள், மங்கலப் பொருட்கள் எல்லாம் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

**வாழ்த்துகளைப் பெற வந்துள்ளேன்**

இதில் கலந்து கொள்வதில் எனக்கு சிறப்பு, கூடுதல் மகிழ்ச்சி, மட்டற்ற மகிழ்ச்சி. ஏனென்றால், இந்த நிகழ்ச்சி நம்முடைய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் நடைபெறுகின்றது. அது மட்டுமல்ல, 200 மூத்த ஜோடிகளில் 18 ஜோடிகள் நம்முடைய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்தவர்கள். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், இங்கே நான் ஒரு துணை முதலமைச்சராக வரவில்லை; விளையாட்டுத் துறை அமைச்சராக வரவில்லை; இன்னும் சொல்லப்போனால் சட்டமன்ற உறுப்பினராகவும் நான் வரவில்லை. உங்கள் பேரப்பிள்ளையாக வந்து, உங்களுடைய வாழ்த்துகளை வாங்க வந்திருக்கின்றேன்.

அண்ணன் சேகர்பாபு அவர்கள், எப்படி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இந்தியாவிலேயே நம்பர் 1 முதலமைச்சர் என்ற பெருமையைப் பெற்றிருக்கின்றாரோ, அதேமாதிரி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையில் நம்பர் 1 அமைச்சர் என்றால், நம்முடைய இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்கள்தான்.

எப்படியும் மாதத்திற்கு 3, 4 நிகழ்ச்சிகளை, என்னை அழைத்து அவர் நடத்திவிடுவார்.

ஆயிரக்கணக்கான திருமணங்களை முதலமைச்சர் அவர்களையும், என்னையும் வைத்து நடத்தியிருக்கின்றார். ஆனால், இந்த நிகழ்ச்சி, சற்றே வித்தியாசமான நிகழ்ச்சி. என்னால் வாழ்நாளில் மறக்கமுடியாத நிகழ்ச்சி. அதையும் அண்ணன் சேகர்பாபு அவர்கள் நடத்திக் காட்டியிருக்கின்றார். அதற்கு இந்த நேரத்தில் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தாத்தா-பாட்டி திருமணம்**

பொதுவாக, மகனின் திருமணத்தையும் பேரனின் திருமணத்தையும் வீட்டில் இருக்கக்கூடிய அப்பா, அம்மாவும் தாத்தா பாட்டியும்தான் முன்னிலை வகித்து, தலைமையேற்று நடத்தி வைப்பார்கள். ஆனால், இந்தப் பேரனுக்கு, தாத்தா, பாட்டியினுடைய திருமணத்தை நடத்தி வைக்கின்ற வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. அதுவும் மேடையில், எனது இடதுபுறமும் வலதுபுறமும் இருக்கக்கூடிய தம்பதிகள், என்னிடத்தில் அனுமதி கேட்டுதான் மாலையை மாற்றிக்கொண்டார்கள்.

தாத்தா பாட்டி அனுமதி வழங்கித்தான் மகனோ, பேரனோ தாலியைக் கட்டுவார்கள், மாலை மாற்றிக்கொள்வார்கள். ஆனால், இந்த மேடையில் மட்டும்தான் பேரனிடம் அனுமதி வாங்கி தாத்தா பாட்டி மாலையை மாற்றிக் கொண்டார்கள். கீழே இருக்கக்கூடிய தம்பதிகள் அனைவரும் ஒரே நேரத்தில் ஒருவருக்கொருவர் மாலையை மாற்றிக்கொண்ட அந்தக் காட்சியை நான் பார்த்தேன்.

எனவே, மிகச்சிறந்த இந்த நிகழ்ச்சியில், நான் பேசுவதாக இல்லாமல் இருந்தது. ஆனால், இங்கு வந்து நான் பேசாமல் சென்றால் தாத்தா பாட்டிகளுக்கோ,` பேரன் வந்தானே பேசாமல் போய்விட்டானே' என்று, கோபம் வந்துவிடும். நான் வாழ்த்த வரவில்லை, உங்களின் வாழ்த்துகளைப் பெறவே வந்திருக்கிறேன்.

எனவே, இந்த சிறப்பான நிகழ்ச்சியில் வந்து கலந்துகொண்ட அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகள், வந்திருக்கக்கூடிய மூத்த தாத்தா பாட்டிகளுக்கு என்னுடைய அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவித்து, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி வணக்கம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ்., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க. மணிவாசன் ஐ.ஏ.எஸ்., சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், மயிலம் ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், திருப்பெரும்புதூர் ஜீயர் ஸ்ரீ ராமானுஜ எம்பார் சுவாமிகள் உள்பட ஆன்மிக அன்பர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

---

ஆதிதிராவிடர் – பழங்குடியின ஆணைய உறுப்பினர் முனைவர் ஆனந்தராஜா – முனைவர் குமார் எழுதிய

# ‘மனித உரிமைகளின் கல்வி’ எனும் ஆங்கில நூல்!

## லண்டன் ஃபைசல் தலைமையில் – கோலாலம்பூரில் வெளியீடு!

## டத்தோஸ்ரீ. சரவணன் – செய்யத் இப்ராஹிம் – சு.கல்யாணசுந்தரம் எம்.பி. – கந்தசாமி வாழ்த்து!

கோலாலம்பூர், நவ.11-

ஆதிதிராவிடர் பழங்குடியின ஆணைய உறுப்பினர் முனைவர் ஆனந்தராஜா மற்றும் முனைவர் குமார் எழுதித் தயாரித்த ‘மனித உரிமைகளின் கல்வி’ எனும் ஆங்கில நூல் வெளியீட்டு விழா மலேசியா மற்றும் சிங்கப்பூரில் நடைபெற்றது. மலேசியா - கோலாலம்பூரில் லண்டன் ஃபைசல் தலைமையில் இந்தப் புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் தமிழ்நாட்டின் ஒப்பற்ற முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோரின் வழிகாட்டுதலோடு, ஆதிதிராவிட பழங்குடி ஆணையத்தின் உறுப்பினரும், வழக்கறிஞருமான முனைவர் ஆனந்தராஜா மற்றும் முனைவர் குமார் இருவரும் சேர்ந்து எழுதித் தயாரித்த ‘மனித உரிமைகளின் கல்வி’ எனும் ஆங்கில நூல் வெளியீட்டு விழா தமிழ்நாடு அரசு அயலக தமிழர் நல வாரிய உறுப்பினர் லண்டன் ஃபைசல் தலைமையில் நடைபெற்றது.





முதல் நிகழ்வில் புத்தகத்தை மலேசிய முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மக்கள் இந்திய கட்சியின் துணை தலைவருமான டத்தோஸ்ரீ. சரவணன் வெளியிட மலேசிய தமிழர் ஆறுமுகம் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து இன்னொரு நிகழ்வில் டத்தோ வீரா ஷாஹுல் ஹமீத், டத்தோ செய்யத் இப்ராஹிம், டத்தோ ஹபீப், வெளியிட முறையே மலேசிய தமிழர்கள் காசிம். நசுருதீன், பரக்கத், ஃபிர்தவ்ஸ் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மலேயா பல்கலைகழகத்தில் மொழியியல் துறைசார்பாக முனைவர். செல்வ ஜோதி வெளியிட ஆசிரியர்கள் பெற்றுக் கொண்ட நிகழ்வில் ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அடுத்ததாக மலேசியா பினாங்கு நகரில் நடந்த வெளியீட்டு விழாவில் டத்தோ சீனி முஹம்மது அவர்கள் புத்தகத்தை வெளியிட ஆஷிக், வழக்கறிஞர் ஜெயசீலன், மன்சூர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ச்சியாக சிங்க ப்பூரில் நடந்த புத்தக வெளியீட்டு விழாவில் திமுக அயலக அணியின் சிங்கை பொறுப்பாளர் நரசிம்மன் வெளியிட ஆரிப் பெற்றுக் கொண்டார். வனிதா பதிப்பகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட புத்தகத்திற்கு மாநிலங்களவை உறுப்பினர் கல்யாணசுந்தரம் மற்றும் ஆதி திராவிட பழங்குடியின ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் கந்தசாமி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

---

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 264 வது நாள்!

## எழும்பூர் தெற்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, நவ.11-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 264 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (10.11.2025), எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 58, அல்லிக்குளம், (சென்ட்ரல் ரயில் நிலையம் அருகில்), 2) வட்டம் 58அ, ராமவிலாஸ் ஹோட்டல் அருகில், சூளை, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.





இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், வி.சுதாகர், சொ.வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, புனிதவதி எத்திராசன், கே.எஸ்.எம்.நாதன், கோ.மணி, ஜி.தாமோதரன், பி.எம்.யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, எழும்பூர் தெற்கு/வடக்கு வட்டக் கழக செயலாளர்கள்: வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்த ர்ராஜன், தி.தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்கு மார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

## S.I.R. ஐக் கண்டித்து இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

# மயிலை கிழக்கு பகுதிக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

## பகுதிச் செயலாளர் எஸ்.முரளி வேண்டுகோள்!

சென்னை, நவ. 11-

மயிலை கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் இன்று (11.11.2025 - செவ்வாய்கிழமை) காலை 9 மணி அளவில் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் S.i.R சீராய்வை தேர்தல் ஆணையம் கைவிடக் கோரியும் ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறிய எதேச்சதிகாரப் போக்குடன் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் SIR செயல்படுவதை கண்டித்து மாபெரும் கண்டனஆர்ப்பாட்டம் சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் நடைபெறுகிறது.

மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த மாநில மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள்

வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் பாகப் பொறுப்பாளர்கள், BLA2.BDO. அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி வேண்டுகோள் விடுத்துள்ளார்.